நிற்பவர்கள்: இ. - வ. கே. காந்தரூபன், திரு. ரி. கணபதிப்பிள்ளை, திரு. எஸ். விநாயகமூர்த்தி, திரு., கே. வர்ணகுமாரன், திரு. ரி. மதீஸ்வரன், திரு. பி ராஜ்மோகன், திரு. எஸ், கணேசமூர்த்தி. சமுகமளிக்காதவர்: கே. சண்முகநாதன்

# நிகழ்ச்சி நிரல்

பி. ப. 5:00 கொடியேற்றம்
கனடாத் தேசியக்கொடி, தேசியகீதம்
தாயகக் கொடி, தமிழ்த் தாய் வாழ்த்து
பாடசாலைக்கொடி கீதம்

மங்கள விளக்கேற்றல்
அமைதி வணக்கம்
வரவேற்பு நடனம்
நடனம் - தமிழ்த்தாய் வாழ்த்து
வாய்ப்பாட்டு, வயலின் இசை
சிறுவர் நடனம், 'தம்பிப்பாப்பா"
சிறுவர் நடனம் 'ஆடு பாம்பே ஆடு பாம்பே"
தலைவர் வரவேற்புரை

பி. ப. 6:00 கர்நாடக இசை, தாளவாத்தியம்
நடனம் - 'ஜதீஸ்வரம்"
நடனம் -
நடனம் - 'திருவிளையாடல்"
சிறுவர் நடனம் - 'தலைவன் பிறந்தான்"

பி. ப. 7:00
நடனம் 'ஆடிவரும் அருவியில்"
நடனம் 'டென்மார்க் அம்மன்"
நடனம் 'சப்தம்"
நடனம் - 'மையூராவதி பத்திரகாளி"
நடனம் - 'தில்லானா"
நடனம் - 'கீர்த்தனம்" சந்திரசேகரா
நடனம் - 'கலவைப்பாடல்"
காட்சி - 'தற்காப்புக்கலை"

பி. ப. 8:00 பிரதம விருந்தினர் உரை
சங்கீதம் 'முகுந்தா முகுந்தா"
ஆதரவு வழங்கியோர் அறிவிப்பு

இடைவேளை
பி.ப 9:00 'இது தாண்டா செய்திகள்" நகைச்சுவை செய்தி
நன்றி உரை செயலாளர்
'நான் அவனில்லை" , நனைச் சுவை கலக்கல்
'இனம் காக்கும் கலப்புகள்" இசைவார்ப்பு
'வணக்கம் வாத்தியார்" நகைச் சுவை நாடகம்
தயாரிப்பு: திருமதி நளினி சிவயோகம்


Thinking of Selling?
List With
Shan's Home Team
&
Consider it
"SOLD"
Shan Thayaparan
Sales Repesentative
"FREE MARKET EVALUATION"
"FLEXIBLE COMMISSION"
Your peace of mind is my goal.....
Dir: 416.567.7675 / Bus: 416.321.6969
Web:www.shan123.com E-mail: shan123@rogers.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc. Brokerage
206 - 1711 McCowan Rd., Scarborough, ON. M1S 3Y3
Not intended to solicit properties currently listed for sale or buyers under contract.
*Each office is independently owned and opererated.
Right house is a Sweet Home

# உடனடியாக பதிவு செய்யுங்கள்!

## காப்புறுதி முகவராவதற்கு விரும்புகிறீர்களா?

5 நாட்கள் - மாலை நேர வகுப்புகள்

ஒவ்வொரு வகுப்பிலும்

**83%** சதவீதமானோர் சித்தியெய்துகிறார்கள்

எம்மோடு இணைந்துகொள்வதனால் உங்களுக்கு ஏற்படும் அனுகூலங்கள்

- தொடர்ச்சியான பயிற்சி
- சிறந்த அலுவலகச் சூழல்
- மிக உன்னதமான இணையத்தளம்

A state-of-the-art web site, that will make you
• More Productive • More Efficient • More Money

இப்பொழுதே அழையுங்கள்
ROYAL BROKERS
Tel: 416•215•8100

பல்வேறு நிறுவனங்களிடமிருந்து குறைந்த விலையில் உங்கள் காப்புறுதியை தெரிவு செய்துகொள்ள

மருத்துவ பரிசோதனையற்ற ஆயுட் காப்புறுதி

மிகக் குறைந்த கட்டணமாக $15ல் இருந்து!

• சில நிபந்தனைகள் கருத்திற் கொள்ளப்படும்

வயோதிபர்களுக்கு அதிகுறைந்த விலையில் காப்புறுதி

**100% Cash Back Mortgage Insurance**

சிறுவர்களுக்கான சிறந்த RESP திட்டங்கள்



**Siva Kandiah**
*Managing General Agent, RBC*
416•992•1259

ROYAL BROKERS
Corporation


80 Nashdene Ave., unit B26 Toronto ON. M1V 5E4
Tel: 416•298•4722 Fax: 416•298•4664

RBC Insurance Authorized Agent — Industrial Alliance — Canada Life

• Life Insurance/ Income Protection • Disability/ Critical Illness • Mortgage & Mortgage Insurance • Registered Education Saving Plans
• Travel Coverage • RRSP's, Annuities, RIF's GIS's • Tax Sheltered Savings & Investments


SKL
SKL LIQUIDATION
All Kinds of Electronics Wholesale/Retails
உங்களுக்குத் தேவையான
சகல எலக்ரோனிக்ஸ் பொருட்களுக்கும்
மலிவு விலைகளில் நம்பிக்கையுடன் நாடுங்கள்
Wholesale
& Retail
கனடாவின் தமிழ் வானொலி
அலை வரிசைகள் பெற்றுக்
கொள்ளக்கூடிய வானொலிகள்
மலிவாகக்கிடைக்கும்.
Tel: 416-291-2299
1220 Ellesmere Rd., Unit: 6, Scarborough (Midland & Ellesmere)


இந்து கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம்
பூப்புனித நீராட்டு விழா
பரத நாட்டிய அரங்கேற்றம்
பிறந்த தின விழாவிற்கான
தலை முக அலங்காரங்கள்
சடைநாகம், மணமாலைகள், ஆண்டாள்மாலை என்பனவும்
Veil (Gold& White) பெற்றுக்கொள்ளலாம்
BRIDAL DRESSING
&
HAIR STYLING
Thaya (Mrs. Moorthy)
Tel: 416.335.6553, Cel: 647.292.6553
எங்களிடம் மணப்பெண்ணிற்கான
பூச்செண்டு, (Bouquet), பூக்கூடைகள்
(Flower Girl's Baskets),
அரக்குதலைநகை செற்
என்பவற்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்


Children Education Trust of Canada
offered to the public by
CHILDREN'S EDUCATION FUNDS INC.
குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம் - கனடா
Depository
Scotia Bank
Trustee
The Bank Of
Nova Scotia
Trust Company
Investment Advisors
Scotia McLeod
T.D.Waterhouse
CIBC Wood Gundy
Fiera Capital
For More Information
Please Cantact: S.V.Moorthy
Res: 416-335-6553
Cell: 416-508-0370
Fax: 416-335-7807
Email: SVMoorthy23@yahoo.com


Sutton®
Courtier Immobilier Agréé
groupe sutton-performer inc.
உங்கள் கனவு
ஒரு அழகிய இல்லம்...
அதை வாங்கித்தருவதே
எனது கடமை
Pushpanantham ( Pushpan )
Kathiresu
Agent immobilier affilié
மொன்றியலில் அனைவருக்கும்
அறிமுகமான முகவர்
அழையுங்கள் : புஸ்ப்பன்
514-952-7047
123, place Frontenac, Pointe-Claire, Qc, H9R 4Z7
bur.: 514-426-9595 / fax: 514-426-9596
pkathiresu@sutton.com www.suttonquebec.com

**(ஆ) உபதலைவர்:**

தலைவர் சமூகமளிக்க இயலாதவிடத்து உபதலைவர் தலைமை வகிப்பர்.

**(இ) செயலாளர்:**

நி. கு. நிறைவேற்றும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பிரதான நிர்வாக உத்தியோகத்தராக செயலாளர் செயற்படுவார். அவரின் பிரதான செயற்பாடுகளாக குறிப்பு எடுத்தல், அங்கத்தவர் பதிவேடு, வருடாந்த அறிக்கை தயாரித்தல், மற்றும் முக்கிய ஆவணங்களுக்கு பொறுப்பாவார்.

**(ஈ) பொருளாளர்:**

1. நிதி ஆவணங்களையும் பணத்தையும் செம்மையாக வைத்திருத்தல்
2. வருடாந்த நிதி அறிக்கை சமர்ப்பித்தல்
3. நிர்வாகக் குழு அறிவுறுத்தல்களுக்கு இணங்க நிதி கொடுப்பனவும் பெற்றுக்கொள்வதும், பொருளாளர் பொறுப்பாகும்.

**7. நிதிகள்:**

1. நிர்வாக குழுவின் அறிவுறுத்தலுக்கு இணங்க எல்லா பணங்களையும் வங்கியின் நடைமுறைக் கணக்கில் அல்லது தவணை வைப்பில் வைப்புச் செய்தல் வேண்டும். $500 குறைந்த தொகையை உடன் தேவைக்காக பொருளாளர் கையில் வைத்திருக்கலாம்.
2. தலைவரும், பொருளாளரும் செயலாளருமே வங்கிக்கு கையொப்பமிடும் தகுதி வாய்ந்தவராவர்.
3. சங்கத்தால் சேமிக்கும் நிதியை பின்வரும் விகிதாரத்தில் செலவு செய்தல்

- வங்கியில் நிரந்தர வைப்பிருப்பில் 20% பாடசாலை மேம்படுத்தல் 50% (Eg; Buildings, grounds, Etc.) பாடசாலை கல்வி சம்பந்தமான மேம்படுத்தல் 20% (Eg; Scholarships, Etc. )
  பொது செயற்பாடுகள் 10% (Eg; புயல், சுனாமி, அகதிகள், Etc.)

**8. கூட்டங்கள்:**

**அ. வருடாந்த பொதுக்கூட்டம்**

நவம்பர் மாதத்தின் நாலாவது கிழமைக்கு பிந்தாது நடைபெறுதல் வேண்டும். மொத்த தகைமையுள்ள அங்கத்தவர்களின் 1/3 பங்கினரே நிறைவெண் ஆக கருதப்படும்.

**ஆ. நிர்வாகக்குழு கூட்டம்**

தேவைக்கமைய நடைபெறும் கூட்டத்திற்கான நிறைவெண் 07 ஆகும்

**விசேட அல்லது அவசர கூட்டம்:**

30 அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு கேட்குமிடத்து இக்கூட்டம் கூட்டப்படல் வேண்டும்.

ஈ பொதுக்கூட்டம் 15 நாள், விசேட பொதுக்கூட்டம் 7 நாள் அறிவத்தலுடன் கூட்டப்படுதல் வேண்டும்.

**09. நிகழ்வுகள்**

**1. கலைவிழா**

September / October மாதத்தில் கொண்டாடுதல்

**2. கோடைகால விளையாட்டுப்போட்டி**

July / August மாதத்தில் நடத்துதல்

**11. தேர்தல்கள்**

அ. நிர்வாகக் குழு வருடாந்த பொதுக்கூட்டத்தில் நடக்கும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

ஆ. தலைவர் தவிர்ந்த நிர்வாகக்குழுவில் ஏற்படும் எந்த வெற்றிடங்களும் நிர்வாக குழுவினால் தெரிவு செய்யப்படும்.

இ. தலைவர் பதவி வெற்றிடமாகுமிடத்து, ஒரு விசேட பொதுக்கூட்டம் கூடி தலைவரை தெரிவு செய்தல் வேண்டும்

ஈ. ஒவ்வொரு இரண்டு வருடத்துக்கு ஒருமுறை தேர்தல் நடாத்தப்படல் வேண்டும்

உ. இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்தல் நடாத்தப்படல் வேண்டும்

ஊ. தேர்தல் முந்தைய நிர்வாகக்குழுவினால் நடாத்தப்படும்.

## 11. தீர்மானங்களும் முடிவெடுத்தலும்

1. தீர்மானஙகள் நிர்வாக குழு கூட்டத்தில் பிரேரிக்கப்படல் வேண்டும்.
2. எந்தவிதமான முடிவுகளும் நிர்வாக குழு கூட்டத்தில் மட்டுமே எடுக்கப்படல் வேண்டும்
3. அனைத்து தீர்மானங்களின் முடிவுகள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் மட்டுமே செயல்படுத்தல் வேண்டும்
4. புதிய நிர்வாகக் குழு உறுப்பினரை நிர்வாக குழுவின் முடிவுக்கமையவே தெரிவு செய்யலாம்.
5. தொடர்ந்தும் 3 நிர்வாகக் கூட்டத்துக்கு அறியத்தராது வருகை தராத நிர்வாக உறுப்பினர் தமது பதவியை இழப்பர்.

## 13. கணக்காய்வாளர்:

வருடாந்த பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படும் இரண்டு கணக்காய்வாளர்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் பழைய மாணவர் அங்கத்தின் கணக்கை பரிசீலனை செய்து வருடாந்த நிதி அறிக்கையில் கையொப்பமிடுவார்கள்.

## 14. திருத்தங்கள்

யாப்பில் கொண்டு வரப்படும் எந்த திருத்தமும் வருடாந்த பொதுக்கூட்டத்தில் கூட்டத்திற்கு சமூகமளித்த 2/3 பங்கு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டம் கூடாதமைக்குரிய காரணத்தை நிர்வாக சபைக்கு தெரியாதவிடத்து செயலாளர் தனது பதவியை இழப்பர்.



# DR. K. Jeyalingam, MD, FRCPC, ABIM

## Internal Medicine Specialist

## Medical Clinic

Warden - Finch Medical Clinic
2858 Ellesmere Road
Scarborough, Ontario
Phone: 416-287-1500
Fax : 416-287-1275

3430, Finch Avenue East, Unit 6A
Scarborough, Ontario
Phone: 416-496-1990
Fax: 416-496-1984




*2008*
*ஒன்றுகூடலில்*
*ஒரு காட்சி*

# நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அபிவிருத்தி ஒன்றியம்
## பழைய மாணவர் சங்கம் - கனடா
## 2007-07.22 தொடக்கம் 2008-09.30

### வருமான செலவுக்கணக்கு

**வருமானம்**

**அங்கத்துவப் பணம் - 2007**

| | | | |
|---|---|---|---|
| சாதாரணம் | 151 x 10 | $1510.00 | |
| ஆயுட்காலம் | 19x 100 | $1900.00 | $ 3410.00 |

**நெல்லைத்தீபம் - 2007**

| | |
|---|---|
| செலவிலும் கூடிய வருமானம் | $ 7788.00 |

**அங்கத்துவப் பணம் - 2008**

| | | | |
|---|---|---|---|
| சாதாரணம் | 71 x 10 | $ 710.00 | |
| ஆயுட்காலம் | 34 x 100 | $3400.00 | $ 4110.00 |
| | | | $15308.00 |

**செலவீனம்**

| | |
|---|---|
| சங்கப் பதிவுக் கட்டணம் | $ 278.00 |
| காகிதாதிகள் ஏனையவை | $ 277.00 |
| பற்றுச்சீட்டு அச்சுக்கோப்பு | $ 169.50 |
| நிதிஉதவி - நெல்லியடி ம. ம. வி. | $2000.00 |
| சில்லறைச் செலவு | $ 162.52 |
| 2008 கோடைகால ஒன்று கூடல் மேலதிக செலவு | $ 552.76 |
| வங்கிக்கூலி | $ 32.50 |
| நன்கொடை C.A.R.E Program | $1000.00 |
| | $4472.28 |
| செலவிலும் கூடிய வருமானம் | $10835.72 |
| | $15308.00 |

### 2008-09.30ல் திரண்ட நிதிக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 2007.07.22 திரண்ட நிதி | 1303.12 | இருப்பு வங்கி | $8065.50 |
| செலவிலும் கூடிய வருமானம் | 10835.72 | காசு | $4073.34 |
| | $12,138.84 | | $12,138.84 |

நா. திரவியம்
பொருளாளர்
30.09.2008

**Bank Details:**
Royal Bank of Canada
Sheppard and Markham Branch
5080 Sheppard Ave. East
A/C 101 -883 -7 Transit: 06492

# 2008 ஒன்று கூடல் விளையாட்டு நிகழ்வுகளில் சில காட்சிகள்























MRS
WOOD PRODUCTS
Manufactures of fine, quality cabinets and furnitures. Designed. Manufactured. Installed.
Creative designs, enduring quality and follow-up service are the main ingredients in the success formula for MRS wood products inc. - a custom wood design manufacturer that has earned a steadfast reputation for the past 12 years.
Our commitment to you. It is our mission to provide beautiful cabinetry for homes and offices. We strive to assure that your cabinetry brings you an unrivaled level of value.
45 ESTATE DRIVE
SCARBOROUGH ONTARIO
M1H 2Z2
TEL 416 439-9663
CELL 416 471-4568
FAX 416 439-7486
www.mrswoodproducts.com
paradise print

# மலரப் போகும் தமிழீழம்

- விஜே குலத்துங்கம் -

The reference of my article
STRUCTURES OF TAMIL EELAM by Tamil Eelam Development Organization
thamizeeza udkaddumaanam - thamizeeza porunmiya meembaattu kalakam

Published by :anaiththulaga seyalakam, thamiziiza viduthalaip puligal

எப்போது தமிழ் ஈழம் மலரும் என்பது அனைவருக்கும் இருக்கும் கேள்வி என்றாலும் விரைவில் அமையும் என்பது எல்லொருக்கும் தெரிந்த விடயம். வெளி உலகத்தில் இருப்போர் அல்லது விடுதலைப் புலிகளை சரிவரத் தெரியாதவர்கள் விடுதலைப் புலிகள் வெறும் போரிடும் அமைப்பு, வேறு விடயங்களைச் செய்வதில்லை என எண்ணுவார்கள். ஆனால் வன்னிப் பிரதேசத்திற்குச் சென்றவர்களுக்கு அந்தப் பிரதேசத்தை எவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்திருக்கின்றார்கள் என்பது தெரியும். அது மாத்திரமல்ல, எதிர் காலத்தில் தமிழீழத்தின் கட்டுமானம் எப்படி அமைய வெண்டும் என்பதை அந்தந்த துறைசார் வல்லுனர்களின் ஆலோசனையின்படி தயாரித்தும் உள்ளார்கள். இது ஒரு ஆலோசனைத் திட்டம் என்றாலும் நடைமுறைக்கு வரும்போது, இதில் மாற்றங்கள் ஏற்படலாம்.

இந்தத் திட்டத்தின்படி தமிழீழம் 20 மாநிலங்களாகப் பிரிக்கப்படும் என்றும், இவையாவன நல்லூர், வரணி, கரைச்சி, பூநகரி, முல்லைத்தீவு, மாங்குளம், மாந்தை, மடு, வவுனியா-வன்னி, குச்சவெளி, திருகோணமலை, மூதூர், வாகரை, வெல்லாவெளி, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, பொத்துவில், அறுவாக்காடு, புத்தளம், சிலாபம். திருகோணமலை தமிழீழத் தேசிய தலைநகரமாக அமையும். ஒவ்வொரு மாநிலத்திலும் அதற்குரிய பிரதான நகரம் ஒன்று இருக்கும்.

யாழ் நகரிலிருந்து பூநகரி, கிளிநொச்சி, மாங்குளம், திருகோணமலை, வாகரை, கரடியனாறு, கொக்கட்டிச்சோலை ஊடாக சம்மாந்துறை, வரை ஒரு மிகச் சிறந்த பெருந்தெரு (Super Highway) அமைக்கப்படவேண்டுமென திட்டமிடப்பட்டுள்ளது. மீன்பிடித்துறைமுகங்களுக்கான தொடர்பு, பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு புத்தளத்திலிருந்து பூநகரி வரையும் யாழ் குடாநாட்டைச் சுற்றியும் பருத்தித்துறை, வெற்றிலைக்கேணி, கண்டாவளை, முல்லைத்தீவு, புல்மோட்டை, குச்சைவெளி, திருகோணமலை, வாகரை, மட்டக்களப்பு, கல்முனை, பொத்துவில், குமணம் வரை கடற்கரைப் பாதை அமைக்கப்பட வேண்டும் எனவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

புகையிரதப் பாதையைப் பொறுத்தளவில், தற்போது இருக்கும் வட தமிழீழத்தின் மத்தியூடாகச் செல்லும் பாதை அப்படியே பாவிக்கப்படும். மேலும் வவுனியாவிலிருந்து பறையாங்குளம் வரை ஒரு பாதை அமைத்து மன்னாருடன் இணைக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. வட தமிழீழத்திலிருந்து தென் தமிழீழத்திற்கான இணைப்பை மாங்குளத்திலிருந்து மிகப் பெரும் வீதி (Super Highway)க்குச் சமாந்திரமாக வாழைச்சேனை மட்டும் ஒரு புகையிரதப் பாதையை அமைத்து அங்குள்ள தற்போதைய பாதையை மட்டக்ளப்பு வரையான பாதையுடன் இணைக்கலாம்.

விமானப் போக்குவரத்து விடயத்தில் சர்வதேச விமான நிலையங்கள் பலாலி, திருகோணமலை ஆகிய இடங்களில் அமைக்கலாம் என திட்டமிடப்பட்டுள்ளது. மண்டைதீவு, மாங்குளம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் சிறிய விமான நிலையங்கள் அமையும் எனவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

கடற் போக்குவரத்து சேவைகள் பொதுசனப் போக்குவரத்திற்கும், பொருட்களைக் கொண்டு செல்லல் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீன் பிடித்தலுக்கும் தேவைப்படும். இவற்றில் முதல் இரண்டிற்கும் நெடுஞ்சாலைகளும், புகையிரதச் சேவையும் உபயோகப்படுத்த முடியும் ஆதலால், மீன்பிடித்தல் தொழில் சம்பந்தமாக கடல் போக்குவரத்தில் மிகுந்த கவனம் செலுத்தப்படலாம். இதற்காக மீன்பிடித் துறைமுகங்கள் பண்ணை, ஊர்காவற்துறை, மயிலிட்டி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, வெற்றிலைக்கேணி, கொக்கிளாய், முல்லைத்தீவு, திருகோணமலை, வாழைச்சேனை, மட்டக்களப்பு, திருக்கோவில், வலைப்பாடு, பேசாலை, கற்பிட்டி ஆகிய இடங்களில் அமைக்கப்படலாம்.

தமிழீழத்திற்கான வளர்ச்சிப் படிமுறையில் முதற்கட்டமாக முதலாவது வருடம் உணவுப்பயிரிடல் தேவைக்கேற்ப செய்கைபண்ணப்படும். மற்றும் மாமிச உணவுக்காக மாடு, ஆடு, கோழி, பன்றி போன்ற கால்நடைகளும் வளர்க்கப்படும். பால் உணவுக்காகவும் கால்நடைகள் வளர்க்கப்படும். கடல் உணவினைக் கூடுதலாகப் பெற்றுக் கொள்ள மீன்பிடித் தொழில் முழு அளவில் மேற்கொள்ளப்படும்.

இரண்டாம் கட்டமாக கைத்தொழில் உற்பத்திகள் ஆரம்பிக்கப்படவேண்டும். இதற்கு முதற்கட்டமாக தமிழீழத்தில் செயலற்று இருக்கும் தொழிற்சாலைகள், உற்பத்தி நிலையங்கள் சிறிய அளவில் இயங்கிக்கொண்டிருக்கும் உற்பத்தி நிலையங்கள் அனைத்தையும் புனரமைப்புச் செய்தல் வேண்டும். இதில் முக்கியமானவையாக காங்கேசந்துறை சீமெந்து ஆலை, கொக்குவில் ரயர் புனரமைக்கும் தொழிற்சாலை, நாவற்குழி ரயர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, ஈவினை அஸ்பிஸ்டஸ் கூரைத்தகடு தொழிற்சாலை, நாவற்குழி யாழ்பாணத்திலுள்ள மீன்பதனிடும் தொழிற்சாலைகள், பருத்தித்துறை, காரைநகரில் உள்ள வள்ளம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியன புனரமைக்கப்பட்டு உற்பத்திகள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சிகள் மூலம் பெறப்படும் நவீன தொழில் நுட்பங்கள் மூலம் சோளம், அரிசி, குரக்கன், போன்ற தானியங்களில் இருந்து பெறப்படும் திரவ குளுக்கோஸ், பியர் போன்றவைகள் உள்ளூர் தேவைகளுக்கும், ஏற்றுமதிக்காகவும் உற்பத்தி செய்யப்பட வேண்டும். மற்றும் ஏற்றுமதிக்காக காளான் செய்கை ஆராய்ச்சிக்கு இத்தொழில் நுட்பத்தை பயன்படுத்தலாம்.

மூன்றாவது கட்டமாக அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்றுமதி செய்யக் கூடிய பொருட்களை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்ய வேண்டும். இதில் முக்கியமாக கடல் உணவாகிய இறால், மீன், கடல் அட்டை, கருவாடு, சங்கு, ஆகிய கடல் உணவுப் பொருட்கள் யாவற்றையும் சர்வதேச தரத்திற்கமைய பதனிட்டு, பொதியமைத்து ஏற்றுமதி செய்தல் வேண்டும். இவற்றுடன் பழவகைகள், காய்கறி வகைகள் ஆகியவற்றை மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். மேலும் மதுசார உற்பத்தி வகைகளாக சாராயம், பிரண்டி, ஜின், பியர் ஆகியவற்றை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்.

மேற்கூறப்பட்ட ஏற்றுமதிப் பொருட்கள் மூலம் பெறப்படும் அந்நியச் செலவாணி திருப்திகரமாக அமையும் வேளையில் நவீன தொழில் நுட்பம் கொண்ட கைத்தொழில் நிறுவனங்கள் தமிழீழத்தில் ஆரம்பிக்கப்படலாம். இக்கட்டம் தமிழீழம் உருவாகி குறைந்தது 3 அல்லது 4 ஆண்டுகளின் பின்பே நடைபெறும். இக்காலகட்டத்தில் தான் மின் இயந்திரவியலில் இயங்கக்கூடிய ஒலி, ஒளி, கேட்கும் பார்க்கும் சாதனங்கள், ஊர்திக்கான மின் உபகரணங்கள், ஒளியூட்டும் மின் குமிழ்கள், சூரியக்கதிர் பிறப்பாக்கிகள், தொலை தொடர்புச் சாதனங்கள் போன்றன வெளிநாட்டு உதவியுடன் ஆரம்பிக்கலாம்.

மேலே கூறப்பட்ட காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைத் திட்டங்கள் அனைத்தும் 5 ஆண்டு தொடக்கம் 8 ஆண்டு காலகட்டத்திற்குள் பரிபூரண உற்பத்தி நிலையை அடைந்துவிடும். இக் காலகட்டத்தில் அந்நிய நாட்டு உதவியுடன் பாரிய தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டத்தினை ஆரம்பிக்கலாம். இதில் மிக முக்கியமானவை கப்பல் கட்டும் தொழிற்சாலை, கப்பல் உடைக்கும் தொழிற்சாலை, மசகு எண்ணை சுத்திகரிக்கும் ஆலை, உர உற்பத்தி ஆலை, எல். பி வாயு ஆகிய தொழிற்சாலைகள் உற்பத்தியை ஆரம்பிக்க குறைந்தது 10 தொடக்கம் 12 ஆண்டுகள் தேவைப்படும். மேற்கூறப்பட்ட தொழிற்சாலைகள் பூரணத்துவம் பெற 15 வருடங்கள் செல்லும்.

மேற்கூறப்பட்டவையிலிருந்து தமிழீழத்தைக் கட்டியெழுப்ப அதிகளவு அந்நியச் செலாவணி தேவைப்படுகின்றதென்பது புரிந்திருக்கும். எனவே தமிழீழத்தை கட்டியெழுப்புவதற்கு பெருமளவில் வெளிநாட்டில் இருக்கும் தமிழர்களின் பங்கு பெருமளவில் இருக்கப்போகின்றது. எனவே அனைவருமாகச் சேர்ந்து மலரப் போகும் தமிழீழத்தைக் கட்டியெழுப்புவோம்.



வீடு
வாங்க விற்க
நம்பிக்கையான
சேவை

Century 21
Affiliate Realty Inc., Brokerage

**Thana Manickavasagar**
*Broker*

**Cell: 416-728-5772**

2004
2005
2006

- இலவச மதிப்பீடு
- அடமான ஒழுங்குகள்
- சட்டத்தரணி
- வீட்டுப் பரிசோதனை

80 Corporate Drive Unit 208
Toronto, Ontario M1H 3G5
Business **416-290-1200**
Fax: 416-290-1900
Email: thana7@gmail.com
web: www.thana.ca

# INSURANCE SERVICE INC.

Life Insurance
Critical Illness Insurance
Disability Insurance
Mortgage Insurance
RRSP - Start from $25
Loan approval within 24hrs - Bad credit no problem
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)

**Thana Manickavasagar**
*Broker*

**Cell: 416-728-5772**
Business: 416-290-1200
web: www.thana.ca

# குருதிக் கொடை

சிவாஜினி பாலராஜன்
1979 ம் ஆண்டு விஞ்ஞானபிரிவு

ஒரு மனிதனின் மனித நேய உணர்வும் தாராள தன்மையும் பல வழிகளில் வெளிப்படலாம். நன்கொடை, ஏதிலி (அகதி) நிவாரண நிதி ஆகியவை கொடையின் வடிவங்களே. கொடையாக வழங்கப்படும் பொருளைவிட அதனை வழங்குவதற்கான தாராள மனநிலையே உண்மையான வள்ளல்தன்மையினையும் நேச உணர்வையும் வெளிப்படுத்தும். தானங்களிலேயே சிறந்தது இரத்ததானம். சொல் நயங்களால் பேசப்படுவது அல்ல இவ்வகையான தானம். உணர்வு பூர்வமான செயற்பாட்டினால் வெளிப்படுத்தப்படுவது ஏனென்றால் இந்தக் குருதியை எங்கள் உடம்பிலிருந்து எடுத்து தானம் வழங்குகின்றோம் கொடுக்கிறோம். தன்னுயிர் போல் மன்னுயிரும் நேசிக்கும் ஆற்றல் தான் இவ்வகையான செயற்பாடுகளுக்கு தூண்டுகோலாக அமையும். குருதி தானம் நற்காரியம் மட்டுமல்ல ஒரு சமூகப் பொறுப்பாகவும் கருதப்படுகின்றது. இவ்வாறான செயற்பாட்டிற்கும் கொடைக்கும் ஈழத்தமிழர்கள் முக்கியத்துவம் கொடுப்பதற்கும் அவற்றினை முன்னெடுப்பதற்கும் காரணம் கண்கூடாக கண்டு அனுபவித்த இழப்புக்களும் சிந்திய குருதியும தொலைந்து போன உறவுகளும்தான்.

முளையாக்கம் (cloning), பரிசோதனைக்குழாய் குழந்தை (test tube baby) இவ்வாறு பலவிதமாக விஞ்ஞானம் வளர்ந்த போதிலும் இந்த குருதிக்கு செயற்கை முறையிலான மாற்றீடு கிடைக்காமல் குருதி இழப்பை குருதியாலேயே ஈடுசெய்ய வேண்டிய ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றோம். குருதிக்குரிய தேவை ஒரு தொடரச்சியான தேவையாக மட்டுமல்ல ஒவ்வொரு நாளும் பூரணப்படுத்தப் படவேண்டிய மிகவும் அத்தியாவசிய தேவையாகவும் அமைகின்றது. அண்மையில் நடத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின்படி, ஓர் ஆண்டுக்கு கனடிய வைத்திய நிலையங்களுக்கு 900,000 இரத்த தானங்கள் தேவைப்படுகின்றன. கடந்த ஆண்டு மாத்திரம் இரத்தத் தேவை 3.3 விழுக்காடினால் அதிகரித்துள்ளது. ஒரு பைந் குருதி செங்குருதிச் சிறுதுணிக்கைகளையும்இ குருதிச்சிறுதட்டுக்களையும், திரவவிழையத்தையும் ஆகக் குறைந்தது நான்கு பேருக்கு தரவல்லது.

## எவ்வகையான நோயாளிகளுக்கு எவ்வளவு இரத்தம் தேவைப்படுகின்றது?

| நோய் | தேவைப்படும் அலகு யுனிற் |
|---|---|
| புற்று நோய் | 8 |
| இருதய அறுவைச் சிகிச்சை | 1 - 5 |
| வாகன விபத்துஅண்ணளவாக | 50 |
| ஈரல் மாற்றீடு | 100 |
| மற்றைய உறுப்புகள் மாற்றீடு | 10 |
| மூளை அறுவைச் சிகிச்சை | 4 - 10 |
| இடுப்பு அல்லது முழங்கால் அறுவைச் சிகிச்சை | 2 - 4 |


*ஒரு அலகு குருதி ஒரு தானத்திற்கு சமம்.


## ஏன் இரத்த தானம் செய்ய வேண்டும்?

- ஒரு நோயாளிக்கு இரத்தம் தேவைப்படின் தானம் செய்யப்பட்ட இரத்தம் மட்டுமே பாவிக்கமுடியும். ஏனெனில் இரத்தத்திற்கு மாற்றீடு ஏதும் இல்லை.
- ஒருவர் வழங்கும் ஒரு பைந் இரத்தத்தில் நான்கு பேரைக் காப்பாற்றுவதற்கு வாய்ப்பு உண்டு.
- மூன்றுக்கு ஒருவர் என்ற விகிதாசாரப்படி இரத்தத்தின் தேவை இருக்கிறது. ஆனால் தானம் பண்ணுவோர் முப்பத்து மூன்றுக்கு ஒன்று என்ற விகிதாசாரத்தில் உண்டு.

## யார் குருதி தானம் வழங்குவதற்கு தகுதியானவர்கள்?

- பதினேழு வயதிற்கும் அறுபத்தியொரு வயதிற்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருக்க வேண்டும்.
- ஆகக்குறைந்தது 50 கிலோ எடைக்கு குறையாமல் இருக்கவேண்டும்.
- தானம் வழங்குவதற்கு 48 மணி நேரத்தினுள் மது அருந்தி இருத்தல் கூடாது.


www.bmsic.com
Residential & Commercial
1st & 2nd Mortgages
ReFinance
Debt Consolidation
Suren Nathan AMP
Mortgage Broker
BonaFide
Mortgage Solutions Inc.
the true freedom...
Scotiabank
Dir: 416.642.9394
Office: 416.548.7475 ext: 601
E-mail: suren@bmsic.com
1920 Ellesmere Road, Unit-109, Scarborough, M1H3V6
Debt is the Slavery of the Free. Our ambition is Your Freedom.



Aiyathurai Kanapathippillai
Sales Representative
Office: 416-740-4000
Fax: 416-740-8314
HOMELIFE
HIGHER STANDARDS
Peter Aiyathurai
Sales Representative
Direct: 416-817-5052
Office: 416-740-4000
Fax: 416-740-8314
23 Westmore Dr, Suite 102
Toronto, ON. M9V 3Y7
HomeLife Superstars Real Estate Ltd Brokerage
Independently Owned & Operated

- தானம் வழங்குவதற்கு கிட்டத்தட்ட மூன்று மணி நேரத்திற்கு முன்னதாக மாப்பொருள், புரதம், கொழுப்பு, தேவையான அளவு விற்றமின்கள் ஆகியவற்றைக் கொண்ட நிறையுணவை உட்கொள்ள வேண்டும்.
- முழு இரத்த தானம் செய்யும் ஒருவர் ஆகக் குறைந்தது 56 நாட்களுக்கு ஒரு தடவையும், பிளாஸ்மா எனப்படும் குருதிப் பாய்மத்தை மட்டும் தானம் வழங்குவோர் மாதத்திற்கொரு தடவையும், குருதிச் சிறு தட்டுகளை தானம் செய்வோர் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவையும் இரத்த தானம் செய்யலாம்.

## எவ்வாறான சந்தர்ப்பத்தில் இரத்தம் தானம் செய்ய முடியாது?

- குளிர் சுரம் இருந்தாலோ அல்லது பல் அடைத்தல், பல் பிடுங்குதல் போன்றவற்றை செய்திருந்தாலோ இரத்ததானம் செய்ய முடியாது.
- ஒரு வருடத்துக்குள் இரத்தம் நீங்கள் பெற்றிருந்தால்
- பொதுவாக மூன்று வருடத்துள் மலேரியா நோய் வந்தவர்கள் அல்லது ஒரு வருடத்துள் மலேரியா இருக்கும் நாடுகளான இலங்கை இந்தியா போன்ற இடங்களுக்கு போயிருந்தால் இரத்தம் கொடுக்க முடியாது.
- ஒரு வருடத்திற்குள் மாரடைப்பு வந்தவராயின் இரத்த தானம் செய்ய முடியாது.
- பச்சை குத்தியவராயின் ஒரு வருடம் முடிய வேண்டும்.

## எவ்வாறு இந்த கொடை செயற்படுத்தப் படுகின்றது.

- விரல் நுனியில் சிறிதளவு இரத்தம் குத்தி எடுக்கப்பட்டு இரும்பு சல்பேற் கலவையிலிட்டு பார்க்கப்படும். குருதியிலுள்ள ஈமோகுளோபினின் அளவு மிகக்குறைவாயின் குருதி எடுக்கப்பட மாட்டாது.
- கேள்விக்கொத்து ஒன்று தரப்படும் அதனை நாங்கள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் அதில் எங்களுக்கு இருக்கும் நோய்கள் நாங்கள் எடுக்கும் மருந்துவகைகள் முன்பு மலேரியா வந்ததா சர்க்கரை வியாதி அல்லது இரத்தக் கொதிப்பு இரத்த அழுத்தம் போன்ற வியாதிகள் உண்டா என்பது போன்ற கேள்விகள் இருக்கும்.
- இரத்த அழுத்தமும் (blood pressure) எங்கள் உடல் வெப்பநிலையும் (temperature ) பரிசோதிக்கப்படும்.
- படுக்க வைத்து இரத்தம் எடுக்கப்படும்.
- சேர்க்கப்பட்ட இரத்தம் முழுவதும் இரத்தம் பரிசோதிக்கும் இடத்திற்கு (laboratory) அனுப்பப் பட்டு கடத்தப்படக்கூடிய நோய்கள் (transmissible diseases) உட்பட பதின்மூன்று வகையான பரிசோதனைகட்கு உட்படுத்தப்படும். நோய்களற்ற இரத்தம் வெவ்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படும். கடத்தப்படக் கூடிய (transmissible diseases) நோய்கள் இருக்கும் பட்சத்தில் அந்த இரத்தம் பாவிக்கப்பட மாட்டாது. அத்துடன் அந்த இரத்தத்தினை வழங்கியவருக்கு அவருடைய நோய் பற்றி தெரிவிக்கப்படும். இதில் பரிசோதிக்கப்படுபவை

  - Blood Type (A,B,AB,O ) and Rh factor (positive, negative)
  - Antibody Detection Test
  - Alanine-Aminotransferase Test (ALT) ஈரலின் தொழிற்பாடு பற்றியது
  - Hepatitis B
  - Hepatitis C
  - Human Immunodeficiency Virus (HIV)
  - Human T cell Lymphotropic virus (HTLV - virus linked to leukemia)
  - Syphilis
  - West Nile Virus
  - Malaria
  - Antibodies to red blood cells

  ஒவ்வொரு கொடையாளிக்கும் ஒரு அடையாள இலக்கம் வழங்கப் படும்.

## இரத்த தான வகைகள்.

1)முழு இரத்த தானம். (whole blood donation)
வழமையாக இரத்த தானம் செய்பவர் ஒரு அலகு (450 மி.லீ.) இரத்தத்தை தானம் கொடுப்பார். இவ்வாறு இவர் கொடுக்கும் போது இந்த இரத்தம் யாருக்குப் போய் சேர்கிறது என்று இவருக்கு தெரியாது,. மேலும் இவ்வகையான தானத்தில் கிடைக்கும் இரத்தத்தில் ஒரு பகுதி முழுமையாகவே இரத்தம் தேவைப்படும் நோயாளிக்கு கொடுக்கப்படும். மறுபகுதியில் குருதிப் பாய்மமும், செங்குருதிச் சிறு துணிக்கைகளும் பிரித்தெடுக்கப்பட்டு பாதுகாக்கப்படும். இம் முழு இரத்த தானத்தினால் சேகரிக்கப்படும் இரத்தம் பொதுவாக leukoreduction என்னும் முறைக்கு உட்படுத்தப்பட்டு அதிலுள்ள வெண் குருதிச் சிறு துணிக்கைகள் அகற்றப் படும். ஏனெனில் இந்த வெண்குருதிச் சிறு துணிக்கைகளே பற்றீரியா, வைரஸ் போன்ற நுண்ணுயிரிகளை

காவுவன.

## 2) குருதியில் ஒரு கூறினைப் பிரித்தெடுத்தல் (Apheresis donation)

இந்த வகை தானத்தில் இரத்தம் தானம் செய்பவரிடம் இருந்து எடுக்கப்படும்போது, ஓர் இயந்திரத்தின் மூலம் தேவையான பாகங்கள் (செங்குருதிச் சிறு துணிக்கை, வெண்குருதிச் சிறு துணிக்கை, குருதிச் சிறுதட்டுகள், குருதிப் பாய்மம் போன்றவை) பிரித்தெடுக்கப்பட்டு பின்னர் மற்றைய குருதி மீண்டும் தானம் வழங்குபவரின் உடலினுள் செலுத்தப் படும். முழு இரத்த தானம் செய்வோருக்கு என்னென்ன கட்டுப்பாடுகள் உண்டோ அவை இவர்களுக்கும் பொருந்தும். அத்துடன் இவ்வகைத் தானம் செய்வோர் 36 மணித்தியாலங்களுக்கு அஸ்பிரின் எடுத்திருத்தல் கூடாது. ஏனெனில் அஸ்பிரின் குருதிச் சிறுதட்டுகளின் செயற்பாட்டை குறைத்து விடும். அத்துடன் இவ்வகையான இரத்த தானம் செய்வோர் 56 நாட்களுக்கு காத்திருக்கத் தேவையில்லை. சில வாரங்களின் பின்னேயே திரும்பவும் கொடுக்கலாம்.

செங்குருதிச் சிறுதுணிக்கைகள் பிராண வாயுவை உடலுறுப்புகளுக்கு விநியோகிக்கும் அதேவேளை, கரியமில வாயுவை அவ்வப் பகுதியிலிருந்து அகற்றுகின்றன. விபத்துக்கும், சத்திர சிகிச்சைக்கும் உள்ளாகுவோருக்கு செங்குருதிச் சிறு துணிக்கை தேவைப்படும். இவை 120 நாட்களுக்கொரு தடவை புதுப்பிக்கப் படுகின்றன.

செங்குருதிச் சிறு துணிக்கையின் பருமனின் மூன்றிலொரு பங்கு பருமனுடைய குருதிச் சிறு தட்டுகள் குருதி உறைவதற்கு உதவுகின்றன. இவை எலும்பு மச்சையில் உருவாக்கப்படுகின்றன. புற்று நோய் சிகிச்சைக்கு இது பெருமளவு தேவைப்படுகின்றது.

பிளாஸ்மா எனப்படும் புரதச் சத்து நிறைந்த குருதிப் பாய்மம் மற்றைய குருதிக் கூறுகளான செங்குருதிச் சிறுதுணிக்கை, சிறுதட்டுகள் என்பவை உடல் முழுவதும் கடத்தப்படுவதற்கு உதவுகின்றது.

## 3) தனக்கு தேவையான இரத்தத்தை முன்னதாகவே கொடுத்து வைத்தல்
(Autologous blood donation)

இது பொதுவாக ஒருவர் தனக்கு அறுவைச் சிகிச்சை நடப்பதற்கு ஆகக்கூடியது 5 வாரங்களுக்குள் தனது இரத்தத்தை இரத்த வங்கியில் அல்லது மருத்துவ மனையில் கொடுத்து வைத்தல் ஆகும். ஆனால் இவ்வகையாக செய்யும் போது இரத்தம் எடுத்தல், பரிசோதித்தல், பாதுகாத்தல் என்பவற்றிற்காக ஒரு சிறு தொகை பணம் செலுத்த வேண்டி இருக்கும். இருப்பினும் இம்முறையினால் ஒவ்வாமை போன்ற சுகயீனங்கள் தவிர்க்கப்படும்.

## 4) நெறிப்படுத்தப்பட்ட தானம் (Directed donation)

இவ் வகையான தானம் குடும்பத்தவர், நண்பர்கள், உறவினர்கள் அல்லது குறிக்கப்பட்ட ஒருவருக்காகச் செய்யப்படும். ஆனால் இவ்வாறான தானத்தில் நோயாளிக்கு என்ன வகை இரத்தம் தேவையோ அந்த வகையே வழங்கப்பட வேண்டும்.

இரத்த தானம் கொடுப்பதால் நாங்கள் பலவீனமாகிவிடுவோம் அல்லது எங்கள் உடலில் வேறு நோய்கள் வரும் என்று பலரிடம் தப்பபிப்பிராயம் உண்டு. மாறாக நாங்கள் வழங்கிய குருதி 48 மணித்தியாலங்களுள் ஈடுசெய்யப்பட்டு விடும்.

கடையேழு வள்ளல்களையும் உலகம் இன்னமும் போற்றுகின்றது. பொன்னையும் பொருளையும் மனிதர்களுக்கு வாரி வழங்கிய இவர்கள் விலங்குகளுக்கும் செடி கொடிகளுக்கும் இரக்கம் காட்டியதால் இன்றும் போற்றப் படுகின்றார்கள். இவ்வாறான வழிவந்த நாம் எங்கள் உடலில் இருக்கும் குருதியை மரணத்தின் வாசலில் நிற்போருக்கு வழங்குவதில் மனநிறைவு கிடைக்குமல்லவா. சிறந்த கொடை எனப்பார்த்தால் நம்மிடம் மிகுதியாக உள்ளதை கொடுப்பதைக்காட்டிலும் நம் உடலிலிருந்து கொடுப்பது பெருங்கொடையே.


**"மனித நேயத்தை சொற்களால் அல்ல இரத்த தானத்தால் வெளிப்படுத்துவோம்."**

# RAMAN APPLIANCE INC.

## •SALES •SERVICE •INSTALLATION


We service all makes:
GOODMAN,
PAYNE,
KEEPRITE,
ARMSTRONG,
GIBSON,
LENNOX,
YORK ETC.

- Heating
- Air Conditioning
- Humidifiers
- Ventilation
- Gas Fireplaces
- Air Cleaners



## GARAGE DOOR OPENER

Chamberlain
Liftmaster



**Best in Service & Installation**
**Best Financing Package (up to 10 years)**
**Best Warranty**
**Lowest Prices Guaranteed!**

**RAMAN APPLIANCE INC.**
**3021 Markham Rd., Unit 51, Scarborough, ON M1X 1L8**
**416-332-1989**
TSSA Registration Number: 000076640659

# VEERAR வீரர் கேற்றரிங்

## Take Out & Catering

- திருமண விழாக்களா?
- பிறந்தநாள் விழாக்களா?
- பூப்புனித நீராட்டு விழாக்களா?
- வீட்டுக்கு விருந்தினர் வருகையா?
- தரமான உணவு வகைகளுக்கு அழையுங்கள்...

பிரதி செவ்வாய் வெள்ளி
தோறும் 10 மரக்கறிகளுடன்
சாப்பாடு $3.99 மட்டுமே

**வீரரின் புதிய அம்சம் காலை 10 மணி முதல்**
**புத்துணர்வூட்டிடும் கோப்பியும் வடையும்**

# 416-299-4541

**5790 Sheppard Ave. E, Unit 3**
**Scarborough, Ontario M1B 5J7**

உங்கள் மனநிறைவுகசு நாங்கள் உத்தரவாதம்

# RUBAN Auto Tech

*உங்கள் சகலவிதமான திருத்த வேலைகளுக்கும் நாடுங்கள்*

**Domestic - European**
**Japanese Cars & Vans**
**We are Specialized in HONDA**

- Tunp Up
- Brakes
- Air Condition
- Insurance Claims
- Computerized Wheel Balancing
- Under Coating Rust Roofing
- Transmission
- Engine
- Body Work

## Call: Ruban

## Tel: 416-335-9031

## Fax: 416-335-9033

**5635 Finch Ave. E. Unit 7A, Scarborough, ON**

"தன்னினம் தாழாமை தாழ்ந்தபின் உயிர் வாழாமை" - கரும்புலிகள்

Serve & Protect Your Family

# • நம்பிக்கை • நாணயம் • உத்தரவாதம்

**I will shop around and select the best company with competitive price.**

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

NORWICH UNION

AIG

Unity Life of Canada

Manulife Financial

RBC INSURANCE

Canada Life

- Life Insurance (All Kind)
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Health Insurance
- Investments

♦ உத்தரவாதத்துடன் கூடிய ஆயுள் காப்புறுதி 10, 15, 20 வருடங்களுக்குள் கட்டி முடிக்கக் கூடியதும், கட்டிய பணத்தை மீளப் பெறக் கூடியதுமான ஆயுள்காப்புறுதி

♦ வரிச்சலுகையுடன் கூடிய சேமிப்புடன் இணைந்த ஆயுள் காப்புறுதி (சேமிப்பு பணத்தை எடுக்கும்போது உங்கள் ஆயுள் காப்புறுதி குறைக்கப்படமாட்டாது.)

♦ நீங்கள் வங்கியில் பெறும் வீட்டுக்கடன், வியாபாரக்கடன் ஆகியவற்றை பாதுகாக்கும் சிறப்பான ஆயுள்காப்புறுதி.


♦ கொடிய நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness Insurance) கடும் சுகயீனங்கள் ஏற்படும்போது உயிரோடு இருக்கும்போதே காப்புறுதி தொகையை பெற்றுக்கொண்டு மனஆறுதல் அடையும் (living Benefit) காப்புறுதி மட்டுமல்லாது, கடும் சுகவீனங்கள் ஏற்படாத பட்சத்தில் கட்டிய முழுப்பணத்தையும் பெற்றுக்கொள்ளக் கூடிய சிறந்த காப்புறதித் திட்டம்.

♦ உங்கள் குழந்தைகளின் உயர்கல்வித் தேவைகளுக்கான சிறப்பான கல்விச் சேமிப்புத் திட்டங்கள், ஓய்வூதியத் திட்டங்கள், வருமான இழப்பீட்டுக்கான காப்புறுதித்திட்டங்கள்

♦ தனிப்பட்ட முறையிலோ, அல்லது குழுக்களாகவோ உல்லாசப்பயணங்களை மேற்கொள்ளும்போது அனைவருக்கும், குறிப்பாக முதியோர்களுக்கும், 1 Million வரையிலான, விசேட சலுகையுடன் கூடிய பிரயாண காப்புறுதியை ஏற்றுக்கொள்வதோடு முன் கூட்டியே தகுந்த இலவச ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

♦ சுகவீனமுற்றோர்களுக்கும், முதியோர்களுக்கும் விசேடமாக வழங்கப்படும் இலகுவான மருத்துவ பரிசோதனையற்ற ஆயுள்காப்புறுதி.

♦ தமிழீழத்திலும், கனடாவிலும் 20 ஆண்டுகளுக்கு மேலாக எம்மக்களுக்கு நம்பிக்கை, நாணயம், உத்தரவாத்துடன் திறம்படச் செயலாற்றி அநேகரது நன்மதிப்பையும், பாராட்டுதலையும் பெற்றவர்.



**Call:**

**T. K. THEVARAJAH**

(நோர்விச் யூனியன் அதி சிறந்த விற்பனையாளர் விருது பெற்றவர்
முன்னாள் இலங்கை காப்புறுதிகூட்டுத்தாபன காப்புறுதி ஆலோசகர்)

**Office: 905-479-0888 Ext. 248**
**Mobile: 416-618-5907**
**Fax: 905-479-2144**
**E-mail: rajahkana@hotmail.com**
**IDC Financial**
3000 Steeles Ave. East, Suite 103 Markham ON L3R 4T9

23rd YEAR IN CANADA

# YAARL CAKE HOUSE

## யாழ் கேக் ஹவுஸ் / அபிராமி அச்சகம்









Chandra Thambirajah was the first Award Winner under professionals categories at the Canadian Society of Sugar Artistry Inc. Cake Show and Competition for year 2000 held Scarborough Town Centre

Cake, Rich Cake, Baptism Cake, Wedding Cake, Free Cake Boxes & Bags மற்றும்
சகல தமிழ், ஆங்கில அச்சு வேலைகளுக்கும் அபிராமி அச்சகம்

**Tel: 416-431.6604 / 431-6874 / 905-472-2580**

**555 Markham Road (Markham & Lawrence)**

Business Hours: 11:00 - 8:00 (6 Days a week) - Tuesday Closed

# டாக்டர் யாழினி கருணாநிதி O.D.

## கண் பரிசோதனை நிபுணர்

# OPTOMETRIST



கண்களில் ஏற்படும் கோளாறுகளுக்கு
தகுந்த சிகிச்சை வழங்கப்படும். அல்லது
தகுந்த சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்படும்
OHIP, மற்றும்
பிரத்தியேக காப்புறுதி திட்டங்கள்
ஏற்றுக்கொள்ளப்படும்.

**Dr. Yarlini Karunanithy O.D.**

5200 Finch Ave. East,
Suite #112, Scarborough, ON

**Tel: 416-298-9674**

# 2007 கலைவிழா நிகழ்வுகளில் சில காட்சிகள்
















SUNOCO
SUNOCO
SUNOCO
PERFORMANCE POINTS
ULTRA 94
OLG
DIESEL
GOLD DIESEL
country style
CIBC
KANNAN THIRAVIAM
TEL:905.738.8535
3191 RUTHERFORD ROAD CONCORD,ONTARIO,L4K 0A3


SUNOCO
SUNOCO
ULTRA 94
SUNOCO
PERFORMANCE POINTS
VANATHY KANNAN
TEL:416.494.4904
3600 FINCH AVENUE EAST SCARBOROUGH,ONTARIO M1W 3N7

# கருக்கலைப்பு மீதான தடையும் பெண்களின் உரிமையும்.

- வெற்றித்திருமகன்-

நெல்லைத்தீபத்துக்காக மூர்த்தி சரவணமுத்து

பாப்பரசர் 16ம் பெனடிக்ட் அவர்கள் அண்மையில் பிரேஸிலுக்கு ஐந்துநாள் விஜயம் மேற்கொண்டிருந்தபோது கருக்கலைப்புக்கு எதிராக தனது கருத்தை வெளிப்படையாகவே வெளியிட்டிருந்தார். 2005ஆம் ஆண்டு அவர் பாப்பரசரராக பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தபோதே கருக்கலைப்புக்கு எதிரான கருத்தை தெரிவித்திருக்கின்றார்.

லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான விஜயத்தின்போது மெக்ஸிக்கோ நாட்டில் கருக்கலைப்பு செய்வது சட்டபூர்வமாக்கப்பட்டதை கண்டித்தும் தனது கருத்தை பாப்பரசர் வெளியிட்டிருக்கின்றார். கத்தோலிக்க மதம் உட்பட உலகில் உள்ள அனைத்து மதங்களும் கருக்கலைப்புக்கு எதிரான கருத்தை கொண்டிருக்கின்றன என்பதில் எவ்வித ஐயமும் யாருக்கும் இருக்கமுடியாது.

பிரேஸில், உலகின் கத்தோலிக்க மக்கள் வாழும் நாடுகளில் பிரபல்யமான ஒரு நாடாகும். அந்த வகையில் தற்போது பிரேஸிலில் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண்களும், மற்றும் கருவுற்ற ஒரு பெண்ணுக்கு அக்கரு வளர்ச்சியால் உயிராபத்து ஏற்படும் எனக் காணும் பட்சத்தில் மட்டுமே கருவை சட்டபூர்வமாக கலைத்துக் கொள்வதற்கு பிரேஸிலில் சட்டம் அனுமதிக்கின்றது.

இச்சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு 63வீத பிரேஸில் மக்கள் விரும்பவில்லை. அதேவேளை 200,000 பெண்கள் வருடாவருடம் பிரேஸில் நாட்டில் கருக்கலைப்பு செய்து கொள்கினறனர். இவர்களுள் அரைப்பங்கிற்கு அதிகமான பெண்கள் சட்டபூர்வமற்ற வகையிலேயே அதிலும் பாதுகாப்பற்ற முறையில் கருக்கலைப்பு செய்து கொள்கின்றனர் என்பது கவனிக்கத்தக்கது.

உலகளாவிய ரீதியில் கருக்கலைப்பு சட்டங்கள் பற்றியும் இச்சட்டங்கள் சட்டபூர்வமற்ற முறையில் கருக்கலைப்பு செய்வதைத் தடுக்கிறதா என்பது பற்றியும் நோக்குமிடத்து விடை கேள்விக்குரியதாகவே உள்ளது.

இன்று உலகின் பெரும்பாலான நாடுகளில் கருக்கலைப்பு செய்வது சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. உலகநாடுகளில் 54 நாடுகள் கருக்கலைப்பு செய்து கொள்வதை சட்டபூர்வமாக்கியுள்ளன. இந்த 54 நாடுகள் உலகின் 61 வீத சனத்தொகையை உள்ளடக்குகின்றன. அதே வேளை 97 நாடுகளில் கருக்கலைப்பானது சட்டபூர்வமற்றதாக உள்ளது. கருக்கலைப்பு என்பது சட்டபூர்வமானதா சட்டபூர்வமற்றதா என்ற விடயத்திற்கு அப்பால் குடும்ப விழுமியங்களை பறைசாற்றுகின்ற ஒழுக்கம் சார்ந்த விடயமாக இன்றுவரை உலக சமூகத்தால் பார்க்கப்படுகின்றது.

கருக்கலைப்பானது பாதுகாப்பான முறையில் செய்யப்பட்டாலும் பாதுகாப்பற்ற முறையில் செய்யப்பட்டாலும் பெண்களின் உடல் நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது மட்டுமே நிதர்சனமானது. அந்த வகையில் மிகப் பெரும்பான்மையான நாடுகளில் கருவை ஏற்பதால் தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் கருக்கலைப்பு சட்டம் அனுமதிக்கின்றது. ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது உலக நாடுகளில் 25வீத நாடுகள் கருக்கலைப்புக்கான சட்டத்தை மிகக் கடுமையாக கைக்கொள்கின்றன. இந்நாடுகளில் பெரும்பாலான நாடுகள் லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க, ஆசிய நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

கருக்கலைப்பு சட்டத்தின் தோற்றம், அதன் நோக்கம், விளைவுகள் பற்றி பார்ப்போமேயானால், உலகில் உள்ள பல கலாச்சாரங்களிலும் காலம் காலமாக கருக்கலைப்பு செய்யும் வழக்கு காணப்பட்டிருக்கின்றது. பெண்களுக்கு பெண்களே கருக்கலைப்பு செய்ய உதவும் வழக்கம் பல கலாச்சாரங்களிலும் நிலவியிருப்பதற்கான சான்றுகள் இன்றும் பகரப்படுகின்றன. 1800ஆம் ஆண்டு கடைசிக் காலப்பகுதி வரையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் மற்றும் அமெரிக்காவிலும பயிற்றுவிக்கப்பட்ட சில பெண்களால் கருக்கலைப்பானது எவ்வித சட்டத் தடையும் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டு வந்ததை நாம் அறியமுடிகின்றது.

கத்தோலிக்க திருச்சபைகள் கருக்கலைப்புக்கு எதிராக குரல் எழுப்பும் வரையிலும், குறிப்பாக 19ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதி வரை, முன் கூறப்பட்ட நாடுகளில் மறைமுகமாக கருக்கலைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. 1803ஆம் ஆண்டு பிரித்தானியாவே முதன் முதலில் கருக்கலைப்புக்கு எதிரான சட்டத்தை நடைமுறைப்படுத்தியது. அதனைத் தொடர்ந்து 1880ஆம் ஆண்டு அமெரிக்கா கருக்கலைப்பு செய்வது சட்ட முரணானது என்றது. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கருக்கலைப்பு செய்வது குற்றவியல் குற்றமாக கருதப்பட்டது. அதற்கான முதன்மைக்காரணி கருக்கலைப்பு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளாகும்.

# நெல்லை தீபம் 2008

பாதுகாப்பற்ற முறையில் எவ்வாறு கருக்கலைப்பு செய்யப்பட்டது என்பதற்கு சில எடுத்துக்காட்டுகளை நோக்கும்போதே பாதுகாப்பான முறையில் கருக்கலைப்பு செய்வதன் அவசியத்தை நாம் புரிந்துகொள்ளமுடியும். வர்ணக் கலவைகளுக்கு உபயோகிக்கப்படும் எண்ணெய் வகைகள், மற்றும் மிருகங்களின் கழிவுகளைக் கொண்டு தேநீர் போன்ற தயாரித்த கலவையை கருவுற்றிருக்கும் பெண்ணுக்கு அருந்தக்கொடுத்தல், சில மூலிகைகள், தடி, மற்றும் கோழிகளின் எலும்புத் துண்டுகளை கருவாயில் செலுத்துவதன் மூலமும், உயரமான இடத்திலிருந்து கீழ் நோக்கி கருவுற்றிருக்கும் பெண்ணை பாயச் சொல்வதன் மூலமும் கருக்கலைப்பு செய்யப்பட்டது.

இத்தகைய மனிதநேயமற்ற முறையில், கருவுற்றிருக்கும் பெண்ணுக்கு உயிராபத்தை ஏற்படுத்தும் முறைகளில் கருக்கலைப்பு செய்யப்பட்டதன் விளைவாகவே கருக்கலைப்பு செய்வது குற்றவியல் குற்றமாக கருதப்பட்டு முற்றாக தடை செய்யப்பட்டது. பாதுகாப்பற்ற முறையிலும் பெண்களுக்கு உயிராபத்தை விளைவிக்கும் வகையிலும் மேற்கொள்ளப்படும் கருக்கலைப்புக்கு எதிராக சட்டங்கள் ஆக்கப்பட்டபோதிலும், பாதுகாப்பற்ற முறையில் மேற்கொள்ளப்படும் கருக்கலைப்புகளுக்கு எதிராக கடுமையான அல்லது இறுக்கமான சட்டங்களை அமுல்படுத்தியபோதும், பாதுகாப்பற்ற முறையில் மேற்கொள்ளப்படும் கருக்கலைப்புகள் குறைந்தனவா அல்லது முற்றாக தடை செய்யப்பட்டனவா என்ற கேள்விக்கு இல்லை என்றே பதிலளிக்க வேண்டியுள்ளது. இந்தப் பின்னணியில் பெரும்பாலான மேற்கு நாடுகள் கருக்கலைப்பு செய்வதை பிற்காலத்தில் சட்டபூர்வமாக்கிவிட்டன.

ஐக்கிய நாடுகள் மன்று உட்பட பல பெண்களுக்கான நிறுவனங்கள் பாதுகாப்பற்ற முறையில் செய்யப்படும் கருக்கலைப்பு முறைகளைப் பற்றி தமது விசனங்களையும் ஆதங்கங்களையும் ஆங்காங்கே தெரிவித்தே வந்திருக்கின்றன. ஐக்கிய நாடுகள் மன்றின் அறிக்கையின்படி உலகளாவிய ரீதியில் வருடாவருடம் 46 மில்லியன் பெண்கள் கருக்கலைப்பு செய்து கொள்கின்றனர். இவர்களுள் ஏறத்தாழ 20 மில்லியன் பெண்கள் பாதுகாப்பற்ற முறையில் முறையான வைத்தியர்களிடம் செல்லாது கருக்கலைப்பு செய்து கொள்கின்றனர்.

மற்றுமொரு கணிப்பீட்டின்படி உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நிமிடத்திற்கு 100 பெண்கள் கருக்கலைப்பு செய்து கொள்கின்றனர். அவர்களுள் 40 பெண்கள் பாதுகாப்பற்ற முறையில் கருக்கலைப்பு செய்து கொள்வது தெரியவந்துள்ளது. இப்படி பாதுகாப்பற்ற முறையில் கருக்கலைப்பு செய்து கொள்பவர்களது தொகை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே மேற்கொள்ளப்படுகின்றது என்பதோடு கருக்கலைப்பு செய்து கொள்வது சட்டபூர்வமற்றது என மிகக் கடுமையாக தடை விதிக்கப்பட்ட நாடுகளிலேயே இடம்பெறுவது முக்கியமாக கவனிப்புக்குரியது.

பெண்களின் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் மீறல் விடயங்கள் பற்றி ஆராயப்பட்ட மாநாடு கெய்ரோவிலும் சீனாவிலும் கடந்த காலங்களில் இடம்பெற்றிருந்தது. இவ்விரு மாநாடுகளிலும் கருக்கலைப்பு தடைச்சட்டம் அமுலாக்கப்பட்டுள்ள நாடுகளில் பாதுகாப்பற்ற முறையில் கருக்கலைப்பு செய்யும் பெண்களது தொகை அதிகரித்திருப்பது பற்றி ஆராயப்பட்டிருந்தது. பாதுகாப்பற்ற முறையில் கருக்கலைப்பு செய்யப்பட்ட எட்டுப் பெண்களில் ஒரு பெண் மரணமடைகின்றாள் எனவும் ஐக்கிய நாடுகள் மன்றின் அறிக்கை எடுத்துரைக்கின்றது.

பாதுகாப்பற்ற முறையில் கருக்கலைப்பு செய்து கொள்ளும் பெண்கள் தொற்று நோய்களுக்கு ஆளாவதோடு வயிற்றின் அடிப்பாகத்தில் உள்ள திசுக்கள் பழுதடைவதால், மூலவியாதி, சிறுநீர் மற்றும் மலம் போவதை கட்டுப்படுத்தும் உறுப்புகள் பழுதடைகின்றன என மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன. மேலும், பாதுகாப்பற்ற முறையில் மேற்கொள்ளப்படும் கருக்கலைப்பானது பெல்விக் எனப்படும் இடுப்பெலும்பில் நிரந்தர வலியையும் ஏற்படுத்தும். அந்த வகையில் இலங்கையிலும், இந்தியாவிலும் கருக்கலைப்பு செய்வது சட்டபூர்வமற்றது என்பதை கருத்திற்கொண்டால், கருக்கலைப்பு செய்வது தவறான, ஒழுக்கமற்ற, சட்டபூர்வமற்ற விடயம் எனின் ஏன் சட்டபூர்வமற்ற முறையில் கருக்கலைப்பு செய்யும் தொகை அதிகரித்து வருகிறது என்ற கேள்வியும் கூடவே எழுகின்றது. கலாசாரத்தாலும் பண்பாட்டாலும் கருக்கலைப்பு செய்வதை தடுக்க முடியாதவிடத்து, அதையே தகுந்த ஆலோசனைகளை கருக்கலைப்பு செய்பவர்களுக்கு வழங்கி, கருக்கலைப்பு செய்வதை சட்டபூர்வமாக்கினால் என்ன தவறு என்ற கேள்வி எழும் அதே வேளை, காலம் கனிந்து வரும்போது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பெண்கள் உரிமைகள் சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கையும் உள்ளது.

நன்றி
பதிவு இணையம்

நெல்லை தீபம் 2008 சிறப்புற வாழ்த்துக்கள்.

# OHM Printing & Sign

## All Your Printing, Copy & Signs Needs

- Business Card
- Flyers
- Invoice
- Books
- Envelopes
- Menu
- Letterheads
- Scarp Pads
- Rubber Stamps
- Graphic Designs
- Calanders
- Labels
- Store front Sign
- A Signs
- Window signs
- Posters
- Vehicle lettering
- Banner

## Call :416-286-1148

E-mail:ohmprinting@hotmail.com
Fax: 416-286-1206

**4162 Kingston Road**
**Scarborough, Ont. M1E 2M4**

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் - கனடா
Nelliady Madhya Maha Vidyalayam Old Students Association - Canada
(இலாபநோக்கமற்ற அமைப்பு A Registered Non-Profit Organization ON Reg. OCN No. 1746090)
19 Canmore Blvd. Scarborough, Ontario M1C 3T3
www.NMMV.Ca Email: nmmvcanada@gmail.com

**Commitee**

**President:**
Mr. C. Ambihavaran
416-792-0662
**Vice-President:**
Mr. K. Kantharupan
416-895-4283
**General Secretary**
Mr. K. Kularajendram
416-286-0895
**Asst. Secretary Arts:**
Mrs. N. Sivayogan
416-999-3405
**Asst. Secretary - Sports**
Mr. T. Ganapathipillai
416-412-3883
**Tresurer**
Mr. N. Thiraviam
416-332-8738
**Asst. Tresurer**
Mr. K. Varnacumaaran
416-844-7390

**Committee Members**
Mr. T. Matheeswaran
Mr. P. Rajmohan
Mr. S. Vinayagamoorthy
Mrs. P. Mathanalingam
Mr. K. Shunmuganathan
Mr. S. Ganeshamoorthy
Mrs. R. Tharmarajah
Mrs. M. Amirthalingam

**Auditors**
Mr. K. Sivagnanam
Mr. A. Rajaratnam

# கிழக்கு வெளிக்கும், பாதைகள் தெரியும் பயணங்கள் தொடரும்

தாய் நிலத்தின் எமது கல்விக்கோயில் யுத்த முன்னெடுப்பால் சிதைந்து பொலிவிழந்து இருக்கும் காட்சியினை மனதில் உள்ளிருத்தி புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்கின்ற பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து நெல்லைத் தீபம் ஏற்றி பயணிக்கும் இரண்டாம் ஆண்டின் வருகை தந்திருக்கும் அனைத்து உறவுகளுக்கும் எனது இனிய வணக்கத்தையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.


எமக்கெல்லாம் பெருமை தேடத்தக்க கல்வியறிவையூட்டிய அத்தாயின் பெயரால் இன்று தீபம் ஏற்றி மகிழ்வதோடு மட்டுமன்றி எமது கல்வித் தெய்வத்தின் தேவைகள், நாம் செய்யவேண்டிய பெரும் பணிகள் பற்றி சிந்தித்து செயற்படத் தூண்டும் வகையில் இந்த விழா எமக்கு வழி சமைக்கும் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு.

தாயக சூழலில் எமது கல்லூரியின் கல்வித் தரமும், விளையாட்டுத்திறனும், கலாச்சார பண்பும் தாழ்ந்து விடாமல் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பை உணர்ந்து கொண்ட பழைய மாணவர்களாக நாம் செயற்படவேண்டும். கலைநிகழ்ச்சிகளை தந்து விழாவினைச் சிறப்பித்த கலைஞர்களுக்கும், மாணவர்களை நெறிப்படுத்தி மேடையேற்ற அரும்பாடுபாட்ட ஆசிரியர்களுக்கும், நாடகங்களை சிறப்புற அமைத்த கலைஞர்களுக்கும் எமது நன்றி!

பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்த பெருந்தகையாளருக்கும் உறுப்பினர், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கும் மலர் வெளியிட சிறப்புற விளம்பர ஆதரவு தந்த பெருமக்களுக்கும், மலருக்கு விடயதானம் செய்த பெருந்தகையாளருக்கும் ஏனைய ஒளிப்பதிவு, அனுமதி சீட்டுச் செலவினை ஏற்றுக்கொண்ட Vic Mechanical Contracting Inc. ஸ்தாபனத்தாருக்கும் எனது நன்றி.

மலரினை அழகுற அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும், புகைப்பிடிப்பாளாருக்கும், எங்கள் விழா பற்றிய நிகழ்வுகளை வெளிப்படுத்தி உதவிய தொலைக்காட்சி நிறுவனத்தாருக்கும், காற்றலையில் நிகழ்வுகளை மக்களிடம் சேர்ப்பித்து வானொலிகளுக்கும், பத்திரிகை நிறுவனத்தாருக்கும் வருகை தந்து பார்த்து மகிழ்ந்ததோடு கலைஞர்களையும் எம்மையும் உற்சாகமூட்டிய அனைத்து உறவுகளுக்கும் எமது இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

க. குலராஜேந்திரம்
செயலாளர்
11.10.2008


வீடுகள், வியாபார நிலைங்கள்
வாங்க அல்லது விற்க...
✓ Condos
✓ Town Homes
✓ Semi-Detached Homes
✓ Detached Homes..
✓ Industrial Units
✓ Gas Stations
✓ Plazas
✓ Motels....
நம்பிக்கையான முகவர்
2வது பரிசு
Cuba for 2 for 1 Week
1வது பரிசு
BMW 3 Series Car
3வது பரிசு
47" Flat Screen TV
2008 March
BMW
Please Call
Thurairajah Ramesh (B.Sc. Eng.)
Direct 416.917.9957
Office 416.321.6969
HOMELIFE
துரைராஜா ரமேஷ்

*Best Wishes from*

# DR. SANTHAKUMAR & ASSOCIATES

**Family Medical Clinic/குடும்ப வைத்திய நிலையம்**

**KEY TO ALL YOUR MEDICAL NEEDS**

**தமிழ் பேசும் வைத்திய நிபுணர்களின் சேவைகள்**

- **Dr. V. Santhakumar** (MBBS, CCFP) - Family Physician
  Dr. சாந்தகுமார் (குடும்ப வைத்தியர்)
- **Dr. C. Mahendira** (MBBS, CCFP) - Family Physician
  Dr. மகேந்திரா (குடும்ப வைத்தியர்)
- **Sumathy Santhakumar** Bsc. (PT) - Physiotherapist
  சுமதி சாந்தகுமார்
- **Dr. Yalini Karunanithy** (O.D.) - Optometrist
  Dr. யாழினி கருணாநிதி (கண் வைத்தியர்)
- **Dr. Gunaratnam** - Obstetrician/Gynecologist
  Dr. குணாரட்ணம்


குழந்தைகள், தாய்மார்கள் மற்றும் முதியோர் வைத்தியம் உடல், உளநல பராமரிப்பு

**Convenient Location - Centre City Plaza (HWY 10 & Dundas)**

**Pharmacy Next door with services in Tamil**

**OPEN MONDAY TO SATURDAY**

**CENTRE CITY MEDICAL CLINIC**
**204 A & B– 3085 Hurontario Street**
**Mississauga ON L5A 4E4**
**Tel: (905) 273-6895**
**(905) 273-7946 (Physio)**




**BY APPOINTMENT ONLY**


SUNOCO
SUNOCO
SUNOCO
TOUCHFREE
ecowash
entrance
SUNOCO
PERFORMANCE POINTS
ULTRA
94
OLG
DIESEL
GOLD DIESEL
DRIVE-THRU
country style
CIBC
RAJ JEYAKUMAR
905.201.6087
7635 MARKHAM ROAD MARKHAM, ONTARIO L3S 3J9

# MEGA
## Financial Group

**Thinking of Insurance!**
**We have solutions**

- NO Medical
- NO Health Questions
- NO Age Limits

**RAJ NADARAJAH**
**(416) 666-1120**
**OR Any Mega Agent**



OHM PRINTING & SIGN 416-286-1148